# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 20.04.2020. | 1) இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பிரையண்ட் நகர் 4வது மேற்கு தெரு பகுதியில் வ.உ.சி. கல்லூரி வளாகத்தில் அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பள்ளமாக உள்ளது. மேலும் தற்போது அந்த வளாகத்தின் பின்புறம் ஸ்மார்ட் சிட்டி திட்டம் 2018–2019ன் கீழ் புதிதாக பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே தற்போது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தை தனியாகவும், பூங்கா வளாகத்தை தனியாகவும் பிரித்து சுற்றுச்சுவர் அமைத்தல், கழிவறை அமைத்தல் மற்றும் பூங்கா முகப்பில் பெயர் பலகை அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணியினை ரூ.25.20 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 79) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
| 1 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பிரையண்ட் நகர் 4வது தெரு பகுதியில் உள்ள பூங்காவில் சுற்றுசுவர் பேவர் பிளாக் தளம், கிணற்று சரள் நிரப்புதல் மற்றும் பூங்கா முகப்பில் பெயர் பலகை அமைத்தல். | 25.20 |
| | மொத்தம் | 25.20 |
| | எனவே மேற்படி பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 25.20 இலட்சத்தில் பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மாநகராட்சி பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம். இ2/00498/2020 | |
| | 2)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட தெற்கு காட்டன் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் புதிதாக பணிமனை மற்றும் காவலர் அறை கட்டும் பணிக்காக | 80) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ரூ. 42,50,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 25.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 06.03.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. டி. முருகன்<br>மதிப்பீட்டை விட 0.54 சதவிகிதம் குறைவு (ரூ. 37,16,496.000)<br>2)திரு. ஜே. சுரேஷ் ஜெயக்குமார்<br>மதிப்பீட்டைவிட 2.23 சதவிகிதம் அதிகம் (ரூ.38,19,996.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.54 சதவிகிதம் குறைவான தொகை ரூ 37,16,496.00 (GST இல்லாமல்) கொடுத்துள்ள திரு. டி. முருகன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேணடப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மதிப்பீட்டை விட 0.54சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு டி. முருகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம். இ2/00024/2020 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.20.04.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி